# தி/தி/புனித மரியாள் கல்லூரி தேசியப்பாடசாலை
## நான்காம் தவணைப்பரீட்சை – 2021 (2022)
## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்)

தமிழ் I — 72-T-I — சுட்டெண்

மூன்று மணித்தியாலம் — மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடம்

❖ வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

❖ பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி I

மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

1. அ. நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறு சொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோவே னாகுக
ஓங்கிய சிறப்பினுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவனாக
உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன் கண்கூர
இரப்போர்க் கீயா வின்மையா னுறவே

1. இச்செய்யுளில் வெளிப்பட்டு நிற்கும் மையக்கருத்து யாது?
2. செய்யுள் ஊடாக நெடுஞ்செழியன் கூறிய வஞ்சின மொழிகள் யாவை?
3. இலக்கியப் பண்பினை எடுத்து விளக்குக.

(4×3=12 புள்ளிகள்)

ஆ. நங்கையர் நடையின் அன்னம்
நாண் உறு செலவின் நாவாய்
கங்கையும் இடம் இலாமை மிடைந்தன
கலந்த எங்கும்
அங்கொடு, இங்கு இழித்தி ஏற்றும் அமைதின்
அமரர் வையத்து
இங்கொடு அங்கு இழித்தி ஏற்றும்
இருவினை என்னல் ஆன

1. இச் செய்யுள் இடம்பெற்ற சந்தர்ப்பத்தை எடுத்துரைக்க.
2. இச் செய்யுள் வெளிப்படுத்தும் நாவாயின் சிறப்பு யாவை?
3. அணிச்சிறப்பினை எடுத்து விளக்குக.

(4×3=12 புள்ளிகள்)

2. ‘அ’ பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அல்லது

‘ஆ’ பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ. உழுது வாழ்வோன் உணவின்றி
உடலம் சோர்ந்து துடிக்கின்றான்
அழுது வடிந்த கண்ணீரை
அருந்தி நெஞ்சம் கவல்கின்றான்
கொழுத்த செல்வன் உழைப்பவனின்
குருதி குடித்து மகிழ்கின்றான்
பழுத்த அவனின் பெருவயிறு
பானையாகச் சிரிக்கிறது.

ஆடை நெய்வோன் துண்டேனும்
அணிந்து கொள்ள வழியின்றிக்
கோரச் சண்டை தொடுக்கின்றான்
மூடை வயிற்றுப் பெருஞ் செல்வன்
மூக்குமுட்ட உண்ட பினன்ர்
கேடில் பட்டுத் துணியாலே
கையைத் துடைத்து மகிழ்கின்றான்

சேற்று மண்ணில் காலூன்றி
செய்ய உண்டி பல செய்து
ஆற்றல் மிகுந்த தொழிலாளி
ஆன்மா நொந்து தவிக்கின்றான்
போற்ற அவனை யாருமில்லை
புரிய எவனும் இங்கில்லை
வேற்று மனிதன் அவனுயிரை
விழுங்கி ஏப்பம் விடுகின்றான்

சோடை யுற்ற சொறி நாயாய்ச்
சோம்பி நின்றது போதுமடா
பாடை ஏறிச் செல்லுமுன்னே
பானை வயிற்றுச் சீமானை
ஆடையின்றி அணியின்றி
அருந்தி மகிழ உணவின்றி
காடாக்கினியல் தள்ளிவிடக்
கரங்கள் கோர்த்தே எழுங்களடா

நோக்கமில்லாச் சீமான்கள்
நொந்து படையா வாழ்வுக்கோர்
ஆக்கம் செய்த சுரங்களினால்
அழிவு செய்ய எழுங்களடா
தாக்க முற்ற இதயங்கள்
தீயாய் ஓங்கி அவர் வாழ்வைத்
தாக்கி மண்ணிற் சாம்பரெனத்
தள்ளி விட்டே மலரட்டும்

கல்லை உடைத்து நெடுஞ்சாலை
கண்ட கைகள் சீமானின்
பல்லை உடைத்து வளர்கின்ற

பயிருக் கெருவாய்ப் போடட்டும்
நெல்லைக் கொண்ட அவர் மனையை
நெருப்பிலிட்டுக் கொழுத்தட்டும்
எல்லாம் உமதே நீரே தாம்
இந்தப் புவியின் எஜமானர்

1. இக்கவிதை யாரை விளித்துப் பேசுகின்றது? அவர் பற்றிக் கவிஞர் தீட்டும் சித்திரம் எத்தகையது?
2. பிச்சைக்காரன் பற்றி கவிஞர் விபரிக்குமாற்றை விளக்குக.
3. இம்மட்டும் புவியை மறந்திருந்தான்' இத்தொடர் கவிதையில் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.
4. இக்கவிதையில் நீர் காணும் மையப்பொருளைத் தெளிவுபடுத்துக?

அல்லது

ஆ. கதிரேசன் செட்டியார் எப்போது பார்த்தாலும் கடைச் சிப்பந்திகள் மீது இப்படிச் சீறி விழுவதை பல வருஷங்களாகப் பார்த்துக் கொண்டு வந்தவர். சண்முகம்பிள்ளை. ஒரு நாள் கூட செட்டியார் அன்பாக ஒரு பையனைப் பார்த்துப் பேசியதில்லை. மாதத்தில் பத்து நாட்களாவது அவர் செட்டியார் கடைக்கு வந்து சிறிது நேரம் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்து விட்டுப் போவார். அவர் வந்து விட்டால் கடைப்பையன்களுக்கு ஒரே கொண்டாட்டம். ஏனென்றால் அவரோடு பேசிக் கொண்டிருக்கும் போது செட்டியார் சஹஸ்ரநாம அர்ச்சனையைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து விடுவார் என்பது அவர்களுக்குத் தெரியும்.

செட்டியாரும் கூட அர்ச்சனையை நிறுத்துவதற்கு அதை ஒரு நல்ல சந்தர்ப்பமாகக் கருதுவார். சோமசுந்தரம்பிள்ளை குறிப்பிட்டு கடைப்பையன்களுக்கு புத்தி சொல்லத் தொடங்கிவிட்டாலும் கொஞ்சம் மூச்சுவிட்டு ஓய்வெடுத்துக் கொள்வார். பையன்களை நாம் திட்டும் போது தடுத்து நிறுத்த ஒரு ஆள் வேண்டும் என்பதற்காகவே சோமசுந்தரப் பிள்ளையை இந்த முப்பது வருஷ காலமும் தம் கடையில் கணக்குப்பிள்ளையாக வைத்துக் கொண்டிருக்கிறார் என்று சொன்னாலும் தவறில்லை.

1. இவ்வுரைப்பகுதியில் கதிரேசன் செட்டியார் என்ற பாத்திரத்தின் முக்கியத்துவம் யாவை?
2. கதை நகர்விற்கு சண்முகம்பிள்ளை என்ற பாத்திரத்தின் பங்களிப்பை எடுத்துரைக்க?
3. செட்டியார் எப்போதெல்லாம் அமைதி காக்கிறார் என்பதை எடுத்துரைக்க
4. இவ்வுரைப்பகுதியின் எடுத்துரைப்பு முறையை விளக்குக.

(4×4=16 புள்ளிகள்)

3. இடன் அறிதல் என்ற அதிகாரத்தில்…

அ. பகைவரின் கோட்டையைச் சூழ்ந்திருத்தலுக்கேற்ற இடன் அறிதல் பற்றி விளக்குக.
ஆ. போர் செய்வதற்கேற்ற இடன் அறிதலும் குறித்து எடுத்துரைக்க.
இ. பகைவரைப் பொருதக் கூடாத இடத்தை அறிதலும் கூறப்பட்டுள்ளவற்றை விளக்குக.
ஈ. இதில் பயின்றுள்ள அணி குறித்து விளக்குக.

(5×4=20 புள்ளிகள்)

4. குகன் பற்றி சுமந்திரன் அறிந்து பரதனிடம் கூறியது முதல் கங்கையின் தென்கரைக்கு சேர்க்குமாறு பரதன் குகனிடம் கேட்குமாறு வேண்டுவது வரையான பகுதியினை ஆதாரமாகக் கொண்டு,

அ. சுமந்திரன் வாயில் குகனின் சிறப்பு
ஆ. பரதனைக் கண்ட குகனின் நிலைப்பாடு
இ. பரதன் தன்னிலை உணர்தல்
ஈ. பரதனின் சகோதர வாஞ்ஞை ஆகியவற்றை விளக்கி எழுதுக.

(5×4=20 புள்ளிகள்)

5. சிலப்பதிகாரம் ஊர்காண் காதையை அடிப்படையாகக் கொண்டு,

அ. கோவலனுக்கு கவுந்தி அடிகள் கூறிய அறிவுரைகள் பற்றி விளக்குக.
ஆ. முன் செய்த வினை தொடர்ந்து வரும் சேரும் என்பதற்கு கௌந்தியடிகள் காட்டிய வரலாற்று ஆதாரங்களை எடுத்துரைக்க.
இ. 'ஊழ்வினை' கொடுமையானது விளக்குக.
ஈ. இப்பகுதியில் இடம்பெற்றுள்ள வெவ்வேறுபட்ட அணிகள் இரண்டினை எடுத்து விளக்குக.

(5×4=20 புள்ளிகள்)

6. திருப்பாணாழ்வாரின் அமலன் ஆதிபிரான் பதிகத்தில்,
   அ. அரங்கநாதனின் தோற்றப் பொலிவு குறித்து விளக்குக.
   ஆ. பெருமாள் பெருமைகள் பற்றி விளக்குக.
   இ. திருப்பாணழ்வாரின் பக்தியை எடுத்துரைக்க.
   ஈ. இப்பதிகத்தில் இடம்பெற்ற புராண இதிகாசச் செய்திகளை சுட்டிக்காட்டி, அவற்றில் ஒன்றை சுருக்கமாக எடுத்துரைக்க.

(5×4=20 புள்ளிகள்)

7. ‘எனக்கு வயது பதின்மூன்று’ என்னும் சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு,
   அ. ஸல்மா’ என்ற பாத்திரத்தின் நகர்வு குறித்து விளக்குக?
   ஆ. இச்சிறுகதையில் இடம்பெற்றுள்ள வர்க்க பேதங்களை எடுத்துக்காட்டி விளக்குக?
   இ. இச்சிறுகதையில் இடம்பெறும் இஸ்லாமிய பண்பாட்டம்சங்களை எடுத்துரைக்க?
   ஈ. கதாயாரியரின் எடுத்துரைப்பு முறை குறித்து விளக்குக?

(5×4=20 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டினை விளக்குக.
   அ. தேம்பாவணி காட்சிப்படலத்தினூடாக வெளிப்பட்டு நிற்கும் இடையர்களின் பக்தி
   ஆ. ஈழ நாட்டுக்குறம் என்ற கவிதையினூடாக ஈழநாட்டின் சிறப்பு
   இ. தமிழர் பண்பாட்டில் கிராம வாழ்க்கை என்ற கட்டுரையில் ஔவையாரிடத்துப் புதுமைப்பித்தன் கொண்ட ஈடுபாடு புலப்படுமாறு
   ஈ. பாரதிதாசன் கவிதையில் உதயசூரியன் கவிதையினூடாக கூற முற்படுபவைகள்
   உ. மணிமேகலை செய்யுள் ஊடாக இயற்கை, செயற்கை நிகழ்வுகள் குறித்து எடுத்துரைக்க

(10×2=20 புள்ளிகள்)